# ஞான வெண்பா

பதிப்பாளர்

வ. சிவப்பிரகாசம், எம்.ஏ.

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

# ஞான வெண்பா

*சுவடியியலும் பதிப்பியலும்*
*பட்டயப்பேற்றிற்காகச்*
*சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு*
*அளிக்கப்பெறும் பதிப்பேடு*


பதிப்பாளர்

**வ. சிவப்பிரகாசம்,** எம்.ஏ.

நெறியாளர்

**முனைவர் வீ.அரசு**



தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை-600 005.

மே-2007

சுவடியியலும் பதிப்பியலும்

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப்

பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப் பெறும் பதிப்பேடு

பதிவு எண்: 53010631

**முனைவர் வீ. அரசு,**
**பேராசிரியர்-தலைவர்,**
**தமிழ் இலக்கியத் துறை,**
**சென்னைப் பல்கலைக்கழகம்,**
**சென்னை 600 005**

# நெறியாளர் சான்றிதழ்

'ஞான வெண்பா' எனும் தலைப்பிலான ஒலைச்சுவடியைச் 'சுவடியியலும் பதிப்பியலும்' எனும் பட்டயம் பெறுவதற்காக வ. சிவப்பிரகாசம் அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர் தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் : சென்னை – 5.　　　　　　நெறியாளர்

நாள்:　　　　　　(முனைவர் வீ. அரசு)

**வ. சிவப்பிரகாசம்**
**முதுகலை இரண்டாம் ஆண்டு,**
**தமிழ் இலக்கியத் துறை,**
**சென்னைப் பல்கலைக் கழகம்,**
**சென்னை-600 005.**

# பதிப்பாளர் உறுதிமொழி

'சுவடியியலும் பதிப்பியலும்'என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப் பெறும் 'ஞான வெண்பா' எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

இடம் : சென்னை – 5.
நாள்:

பதிப்பாளர்

(வ.சிவப்பிரகாசம்)

# உள்ளடக்கம்


| இயல் | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | I-II |
| பதிப்புரை | III-IX |
| ஞான வெண்பா | 1-27 |
| பின்னிணைப்பு | |
| 1 பாடல் முதற்குறிப்பு | 28-37 |
| 2 சொல்லடைவு | 38-55 |
| 3. துணைநூற் பட்டியல் | 56 |

# நன்றியுரை

புவிக்கு என்னைப் புலப்படுத்திய அன்னை வ. லலிதா தந்தை மு. வரதராசன் ஆகியயோர்க்கு என் முதல் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இமையாது உழைத்து, என்னைக் கல்விப்பணி ஆற்றச் செய்து வரும் எனது அண்ணன் வ. கலைவாணன் அண்ணி க. பூங்கொடி ஆகியோர்க்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

என் பிற பணிகளைச் செய்துகொண்டு என்னைக் கல்வி பணி ஆற்ற செய்யும் என் அன்புத் தங்கை வ. சிவசங்கரி அவர்களுக்கும் என்னை மகிழ்வூட்டும் மகள் க. தனுஷ்யா அவர்களுக்கும் நன்றி. மற்றும் தமக்கை ஞா. கீத்தா - ஏழுமலை - அவர்களுக்கும் நன்றி.

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றில் பயில்வதற்கு வாய்ப்பு அளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்றி.

சுவடியியல் துறையில் சுவடி பதிப்பிக்கும் வழிமுறை, சுவடியைக் கையாளும் முறை ஆகியவற்றைப்

பற்றி எனக்கு அறிமுகப்படுத்திய எனது துறைத்தலைவரும் நெறியாளருமான முனைவர் வீ. அரசு அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி.

சுவடியைப் படிக்கும் வகையில் சுவடி என்னும் இருளில் எனக்கு விளக்கொளியாய் இருந்த முனைவர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் எனது நன்றியை உரித் தாக்குகிறேன்.

இச்சுவடி பதிப்பிற்கு எனக்கு ஞான வெண்பா என்னும் சுவடியைக் கொடுத்துதவிய சென்னைப் பல்கலைக் கழக அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகக் காப்பாளர் சௌந்தர பாண்டியன் அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் உருவாக்கத்திற்கு பல்லாற்றானும் உதவிய என் நண்பர்கள் பெ. சுரேஷ்குமார், எம்.ஏ., செ. செல்வம்,எம்.ஏ., ஜெ. பஞ்சாட்சரம், எம்.ஏ, ப. கலைச்செல்வி,பி.லிட்., பிஎட்.எம்எட், வேல். கண்ணதாசன், எம்ஏ. ,எம்.பில், இரா. சுந்தரபாண்டியன், பி.ஏ, டி.சி.எச்டி., மற்றும் அனைத்து நண்பர்களுக்கும் நன்றி.

சிறந்த முறையில் நூலாக்கம் செய்து உதவிய மாசறு கணினியகத்திற்கும் டுடே கிராபிக்ஸ் நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றி.

*வ. சிவப்பிரகாசம்*

# பதிப்புரை

ஞானம் என்னும் சொல்லுக்கு "அறிவு" "உண்மை" என்று பொருள். ஞானம் பலவகைப்படினும் இறைஞானமே சிறந்தது என்றும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் இறைவனை அடைதலாகிய வீடுபேரே சிறந்தது என்றும், வீடு பேற்றிற்காகவே மற்ற மூன்று படிநிலைகளும் உள்ளன என்றும் கூறுவர்.

ஞானம், யோகம், வைத்தியம், வாதம் ஆகிய நான்கு பொருள்களைப் பற்றியே சித்தர்கள் அதிகம் பாடி உள்ளனர்.

**சித்தர்கள்**

"சித்தர்" என்னும் சொல் "சித்" என்னும் வடமொழி வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியது. "நிறைமொழி மாந்தர்" "அறிவர்" என்னும் சொற்களால் சித்தர்கள் பழங்காலத்தில் குறிக்கப்பட்டனர். "சாரணர்" என்னும் சொல்லால் சமணத்திலும் பௌத்தத்திலும் சித்தர்கள் குறிக்கப்பட்டனர்.

சித்தர்கள் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர்கள் என்பது பொருள். சித்தர்கள் வீடுபேறு அடைந்தவர்கள். பூதஉடல் இருக்கும்போதே முக்தி அடைந்தவர்களை ஜீவன் முத்தர்கள் என்று அழைப்பர்.

முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருவாவினன்குடிக்கு முற்காலத்தில் சித்தன்

வாழ்வு என்று பெயர் இருந்திருக்கின்றது. திருமுருகாற்றுப்படை உரையில் திருவாவினன் குடியைப் பற்றிக் கூறுமிடத்து நச்சினார்க்கினியர் சித்தன் வாழ்வென்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன் குடியென்ற பெயர் பெற்றது என்கின்றார்.

ஔவையார் "சித்தன் வாழ்வு முன்நெறியுடைத்து" என்று கூறுகிறார். எல்லாம் வல்ல சித்தனாகச் சிவபெருமான் திருவிளையாடல் புரிகின்றார் என்று புராணங்கள் கூறுகின்றன.

தேவாரம் சித்தர்களைப் பற்றிக் கூறுகையில் கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றும், கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் கூறுகிறது.

*அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள்.*
*அணுவைப் போல் சிறியதாக மாறுதல்-அணிமா*
*மேருவைப் போல் பெரியதாக மாறுதல்-மகிமா*
*காற்றைப் பரேல் லேசாதல்-இலகுமா*
*பொனர் போலப் பருவாதல்-கறிமா*
*எல்லாவற்றையும் ஆருதல்-பிறாப்து*
*எல்லாவற்றையும் வசப்படுத்தல்-வசித்துவம்*
*கூடுவிட்டு கூடுபாய்தல்-பிரகாமியம்*
*விரும்பியதை எல்லாம் செய்து முடித்து அனுபவித்தல்-ஈசத்துவம்*

என்று சித்திகள் எட்டுவகைப்படுகின்றன. இதையே அட்டமா சித்திகள் என்றழைப்பர்.

சித்தர்கள் தங்கள் நினைவுகளை ஞானத்தில் முழுகவிட்டு, தாங்கள் மட்டும் புவியில் கால்பதித்து நடக்கும் இயல் புடையவர்கள். இவர்கள் எந்தப் பொருள்மீதும் பற்று வைக்காமல் பைத்தியம் பிடித்தவர் போல் அலையும் இயல்புடையவர்கள்.

சித்தர்கள் தாங்கள் பெற்ற ஞானத்தைப் பிறரும் பெற்று வாழ்வில் உயர வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்.

சித்தர் பாடல்கள் பெரும்பாலும் மறை பொருளாகவே அமைந்திருக்கும். எளிய சொற்களால் எந்த பொருளையும் எடுத்துப்பாடும் இயல்புடையவர்கள்.

சித்தர்கள் பதினென்மர் எனக் கூறும் மரபு இருப்பினும் இதையும் கடந்து எண்ணில் அடங்கா சித்தர்கள் இருப்பதை காண முடிகிறது. “சித்தர்கள் அனேகம் கோடி” என்று சடைமுனி கூறுவர்.

சித்தர்கள், பொருளுக்கும், புகழுக்கும் தங்களை ஆட்படுத்திக் கொள்ள மாட்டார்கள். பெரும்பாலான சித்தர்கள் தாங்கள் பாடிய பாடல்களில் தங்கள் பெயர்களைப் பற்றிக் கூட குறிப்பிட்டது இல்லை.

"ஞான வெண்பா" என்னும் இந்நூல் ஒரு சுவடிப் பதிப்பாகும். சென்னை அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத்தில் எண். R. 6417 என்னும் ஓலைச்சுவடியை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது.

நீதிக்கருத்துகளையும், அறக் கருத்துகளையும் பாட உகந்த யாப்பு வடிவமாகிய வெண்பா யாப்பாலே இந்நூலும் பாடப்பட்டுள்ளது. இன்னூல் கடவுள் வாழ்த்தைத் தவிர்த்து 133 நேரிசை வெண்பாவால் ஆனது.

இந்த ஓலைச்சுவடி எந்தக் காலத்தில் எழுதப்பட்டது ஆசிரியர் பெயர், அவருடைய ஊர், அவருடைய சமயம் பற்றிய குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. இந்நூல் சிவம் என்று தொடங்குவதாலும் பாட்டில் பல இடத்தில் சிவனைப்பாடி உள்ளமையாலும் ஆசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது நிரூபணமாகிறது.

மற்ற சுவடி நூலகங்களில் இச்சுவடி இருப்பதற்கான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

சுவடிகள் அனைத்தும் அழியும் நிலையில் உள்ளதால் தாள் பெயர்த்து எழுதப்பட்டுள்ளன. மூலபாட ஆசான் சரியாக நேரிசை வெண்பாவால் எழுதி இருப்பினும் பின்நாளில் ஏடுபெயர்த்து எழுதியவர்கள், நேரிசை வெண்பா யாப்பில் பல பாடல்கள் அமையா வண்ணம் அசிரியத்தளை, கலித்தளை கலந்து எழுதி உள்ளனர். இதனால் சில

பாடல்கள் வெண்பா யாப்பில் அடங்காமலும் உள்ளன. ஏட்டில் உள்ளதை மாற்றும் உரிமை யாருக்கும் இல்லாமையால் அவ்வாறமைந்த இந்த ஏடுகளையும் அப்படியே பதிப்பிக்கின்றேன்.

## நூலின் அமைப்பு

'ஞான வெண்பா' என்னும் இந்நூலின் தொடக்கம் எப்படி அமைந்துள்ளது எனில் முதலில் விநாயகர் சுழியும் அதன் கீழ் சிவம் என்னும் சொல்லும் அதன் கீழ் நூலின் தலைப்பும் இடம் பெற்றுள்ளது.

முதல் பாடலாக கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ளது. இந்தப் பாடலை அடுத்து குருவை வணங்கும் முகமாக "குருவே துணை" என்று அமைந்துள்ளது.

## பாடு பொருள்கள்

ஓலைச்சுவடிகள் எழுதப்பட்ட காலத்தில் "குருகுலக் கல்வி" இருந்ததை அறிவோம். அந்த குருவை எப்படித் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஒருபாடல் கூறுகிறது. இப்பொருள் அமையும் வண்ணம் ஒரு வழக்குத் தொடர் இருப்பதைக் காணமுடிகிறது. "ஆல் சரியில்லை என்றாலும் ஆயிதம் சரியாக இருக்கனும்" என்பதே அத்தொடர் ஆகும்.

இந்த நூலில் எண்ணுப் பெயர்கள் மிகுதியாக கையாளப்பட்டுள்ளன. சடங்குகளை எதிர்ப்பதாகவும்,

கடவுள் என்பவன் உன்னுள் உள்ளவன், வெளியே இல்லை என்றும் கூறுகின்றது.

## யாக்கை நிலையாமை

உடல் அழியும் இயல்பு உடையது என்றும் அவற்றை கருவாடு என்றும் சாடுகின்றனர் சித்தர்கள். அவற்றை அதிகம் போற்ற வேண்டாம் எனக் கூறுகின்ற யாக்கை நிலையாமைத் தத்துவம் பெரிதும் பேசப்பட்டுள்ளது.

## மறுப்பு

தன்னைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளாத மூடர்கள்தான் சாதியைப் பற்றி பேசுகின்றனர் என்று சாதியை எதிர்த்து பாடப்பட்டுள்ளது.

## பெண்ணெதிர்ப்பு

பெண்ணுடலை நாடவேண்டாம் என்றும் பெண்களுக்காக அலைந்து திரியாதீர் என்றும் கூறி உள்ளனர்.

இந்நூல் பழமொழிகள், உவமைகள் போன்றவற்றின் மூலம் மக்களுக்கு தேவையான அறக்கருத்துகளையும், வாழ்வியல் கருத்துக்களையும், உலக உண்மைகளையும் எடுத்துக்காட்டியுள்ளது.

## நூலின் முடிபு

திருச்சிற்றம்பலம் ஞான வெண்பா முற்றும். சிவசண்முக ஞான தேசிகன் திருவடி வாழ்க என முடிந்துள்ளது.

**நமது கடமை**

ஓலைச்சுவடிகள் இன்னும் பல ஊர்களில் காணக் கிடைக்கின்றன. அந்த ஓலைகளை வைத்திருப்பவர்கள், உலக மக்கள் பயன் பெறும் வகையில் அவற்றை அரசு நூலகங்களுக்குக் கொடுக்க முன்வர வேண்டும்.

ஓலைகள் சிறிது காலத்திற்குப்பின் அழியும் இயல்பு கொண்டமையால் அதில் உள்ள அரிய கருத்துகளை இன்றைக்கு உள்ள தொழில் நுட்பம் மூலம் அச்சுவடிவில் கொண்டு வரவேண்டும்.

இதுவே நாம் தமிழுக்கும், நாளைய தமிழர்க்கும் ஆற்றும் நன்றியாகும்.

# சிவம்

# ஞான வெண்பா

வெட்டாத சக்கரம் பேசாத மந்திர மேலோருவற்
கெட்டாத புஷ்ப மிறையாத மஞ்சன மினியொருவர்
கட்டாதலிங் கங்கரிதாத் நேசங் கனவிலுமே
முட்டாத பூசை யென்றே குருநாதன் மொழிந்தனனே

## குருவே துணை

தன்னை யறிவித்தான் தானேதா னானபிரான்
யென்னை யறியவியல் பிற்றான்-பின்னேயொர்
தேவாரங் கண்டிலேன் தென்னன் பெருந்துறையான்
வாவாவென் றாண்ட வழக்கு 1

மெய்க்குருவைத் தேடு வெறித்த வெளிகாட்டும்
பொய்க்குரு வைத்தேடி நீபோகா-நெக்குருவி
நாணாமல் நாடுங்கால் நல்வெளியி லேநிற்குங்
கோணாமற் கோணுங் குறி 2

நானிருந்து வாழ்மனையை நாளளவே கைக்கொண்டின்
தானிருந்த பாழ்மனையைத் தான்தந்தான் வூனில்
கதித்துக் கொழுந் தெழுந்து காலமாண்ட டையக்
கொடுத்து பயிற்பான் குரு 3

ஏன்தான் செனன மெ டுத்தீ ரே டுத்தக்கால்
வான்காணு மீசுரனை வாழ்த்துகிலீர்-யூன்காயத்
தோடும் பொருளை யுணர்கிலீ ரோரெழுத்தைத்
தேடும் பிறவியறச் சென்று 4

ஆரு தரத்தடுக்கு மன்பத்தோ ரட்சரமும்
பேரும சைவைப் பெருந்தவமே-கூறாத
ஏகவெளியாய் நிற்கும் யிருத யகமலத்தே
யாகமுமா மஞ்செழுத்து மே 5

அஞ்செழுத்து யோரெழுத்தா யன்பதிற்பின் னொன்றாகும்
நெஞ்சகத்து ளேதரிக்கும் நிற்பரமர்-மிஞ்சப்
பெறலாம் பதவி பிரமனுடன் மாலும்
மறவாத வன்னிய னாரே 6

அவ்விட்டு எவ்வை யழைத்து அதன்கீழே
உவ்விட்டு காரத்தி னுள்ளுதித்து - மவ்விட்(டு)
யிறிங்கார மாறியம்மெய் வசியிட் டக்கால்
அறங்காணு மோரெழுத்துக் காய் 7

ஓரெ:ழுத்தைக் கொண்டு உகார அகாரமாய்ப்
பேரெழுத்தைக் கண்டேன்பி றைசூடு - சீரெழுத்தில்
உந்திக் கமலத் துதிக்கின் றனுமாலுஞ்
சிந்தித்துப் பெற்றான் சிவம் 8

சந்தியென்றுங் காலையென்றுந் தற்பித்து நீர்முகந்தீர்
யெந்தவித மாகயி றைக்குறீர்-சிந்தைதனில்
அய்ந்துபே ருண்டுஆ சானொ ருவனுண்டு
உந்திநீ ரென்னோ டுரை 9

எல்லா வுயிர்க்குந் துணையாம் யிறைவனை
யெல்லா விடத்திலு மேற்றாமல்-நல்ல
தவத்தைப் பெறலாஞ் சடாட்சரமே வுன்னில்
அவத்துக் கிடம்வராத றி 10

அவ்வைப டைத்தெழுத்து மரிக்கு முதலெல்ழுத்தும்
எவ்வி மலஞ்சுக்கு முயிரெழுத்து-மெவ்வவே
வேரெழுத்தும் வித்தெழுத்தும் மெய்த்தேசி காயனுக்கு
ஓரெழுத்துக் கெங்கே யுரை 11

சிவத்தை யறியீர் சித்தறியீ ரொன்றான்
தவத்தை ய்றிந்ததிலே தாக்காமல்-அவத்திலே
பேசார்பால் கொள்ளுகின்ற பித்தரே துங்களிட
ஆசாரங் காசா குமோ? 12

நவ்வாலு மவ்வாலும் நானழிந்து போகாமல்
சிவ்வாலு மவ்வாலும் சேந்தவா-யவ்வாகேள்
என்னைத்தா ணாக்கிவித்தான் யிருக்கையிலோ யெம்பெருமான்
பின்னைத்தா ணாக்கிவித்தான் பேறு 13

நரகத்தி லேயுதித்து நரகத்தி லேபிறந்து
நரகத்தி லேதிரிந்த நண்பரே-நரகத்தை
விட்டுப் பிரிந்தக்கால் வீட்டின்பங் காணலாம்
திட்டஞ் சிவமயமா மே 14

மாயிறீர் வீணே மனத்திலி ருக்குமந்த
தேயு வறிந்துடனே சேராமல்-வாயுவைத்தான்
கும்பித் திரிந்தாலுங் குடலு முடலுமுயிர்
வெம்பி யுடைந்து விடும் 15

தண்ணிக்குள் பாவை தனையிழந்து நின்றாப்போல்
எண்ணிக்கண் மூடியிருந் தோரை-தண்ணி
ஒளிஓடி நின்றதுவு முண்மைசெய்தால் பின்னும்
வெளியோடி நிற்பதுவு மெய் 16

வித்திலே வேரிருக்கும் வேரிலே வித்திருக்கும்
அத்திலே நின்றங் கறியாதார்-கத்தினால்
காண்போனா மென்று கனத்த திருவடியைப்
பூண்போனா மென்பதெல்லாம் பொய் 17

அஞ்செழுத்தும் பத்தெழுத்தும் அவ்வுமவ்வும் எவ்வுமல்லால்
மிஞ்சியினி யொன்றா முதலெழுத்து-மிஞ்ச
சிவஞான போதகமுஞ் சேர்ந்தபொருள் மூன்றுந்
தவஞானி சொல்லுவரே தான் 18

ஆயத்தெளிவும் ஆற்று மத்திலக் கும்பி
தூயத்தேற்றான் விண்ணை மொன்றினா-லய்டிதான்
தேற்றினார்க் கல்லோதீ ரும்பிறய்து தான்
போற்றினார்க் கென்னவரும் பொய் 19

இராகு வென்றும் கேதுவென்று பாம்புண் டதிலே
இராகுவிலே கேது விறங்காமல்-பார்பரத்தில்
காட் டியற்ற மந்திரத்தால் கால்வீசி யுள்வீட் டி
லாட் டியிருந் தாலிருக் காடாம் 20

நினைந்து மறந்ததுவும் நின்றதுவும் போனதுவும்
தன்னைத்தா னேயறிந்து சாராதார்-பின்னைத்தான்
சாத்திரத்தைப் பொங்கியுண்ட சட்டிதனைக்
கிட்டவைத்து, பாத்திருந்தால் போமோ பசி 21

சொல்லு மெமக்குச் சோதி யுதித்திடமு
மல்லும் பகலும் மந்திடமும்-நல்லோர்
முகமறிந்து தந்தைக்கு முன்னேதா னோக்கி
மகன்பிறந்து வந்த வகை 22

மாங்கிஷத்தி லேயுதித்து மாங்கிஷத்தி லேபிறந்து
மாங்கிஷத்தை யுள்கலந்து மாய்வரோ மாங்கிஷத்தைப்
பொய்யென்று யெண்ணுங்கோள் நெற்றி நடுவணையை
மெய்யென்று யெண்ணுங்கோள் வீடு 23

*தோப்பழுத்து வௌவாலுஞ் துஞ்சறவே நின்றதற்பின்*
*மாப்பழுத்து வீணே மடியுதே-கோப்புடையோர்*
*யில்லாமல் மாவை யிருபொழுதுங் காப்பதற்கு*
*வல்லா னொருவனில் லாமல்* 24

*துறவ ரிறைவகள் தொல்லுலகில் நல்ல*
*பிறபலங்கள் செய்தால் பிடிக்கா-குறைவறவே*
*தன்பங்கந் தீர்க வறியாதார் சாத்தினங்கற்*
*றென்பங்கந் தீர்பா ரிவர்* 25

*எந்தவகை கொண்டு நீரிடே றப்பெறீர்*
*வந்த நிலை யறியாத வீணரே-அந்தமில்லா*
*ஆண்ட குருவை யறிந்தா லறியலாம்*
*பூண்ட வகையிந்தப் பொருள்* 26

*சாத்திரத்தின் சார்பு தனையறிந்து நிஷ்டைபண்ணிச்*
*சூத்திரத்தி னுள்ளே சுருக்கியே-பாத்திருக்க*
*கோளெல்லாந் தீரும் குருவின ருள்பெருகி*
*வாழலாமென்று மகிழ்ந் து* 27

*வாய்பேசா தூமை வகையற்ற கோமளவா*
*பேய்கொண்டு சீலமென்ற பித்தர்கள் தாய்முலைப்பால்*
*உண்டுசெத்த பிள்ளைகளுக் குண்டோ பலமோட்சங்*
*கண்டுகொண்டு செய்த கதை* 28

*காயுங் கிழங்குங் கனியும் பலனென்று*
*மாயுறீர் தின்று மயங்குறீர்-காயத்துள்*
*கங்குல் பகலற் றவிடங்கா ணாதமூடீர்*
*யெங்கேநீ ரீடேறு வீர்* 29

*தானறிந்தரப் போலே சரத்தை விளம்புவார்*
*தானறிந்த பாழ்மனையைத் தானறியார்-தானிருக்கு*
*மந்திபக லற்றவிடம் காணா தமூடரே*
*எந்தவகை யீடேறு வீர்* 30

*கருவி கழன்றிடமுங் காயமெத் திடமு*
*மருவு முருவாய்மந் திடமு-மருவார்*
*அல்லுபக லற்ற விடமறிந் தாலறியலாம்*
*வல்லவர்கள் காண்பார் மதித்து* 31

*விட்டிடமுந் தொட்டிடமும மேவி யிருந்திடமும்*
*கட்டவறி யாமக ழன்றிடமும்-வெட்ட*
*வெளியைக்கா ணாவீணரே நீங்க*
*வெளிறுபொரு ளைதேடீ ருதந்து* 32

*காயங் கழன்றிடமுங் காலல்வீசி நின்றிடமும்*
*ஆயநிராமயமா யானிடமு-முபாயத்தால்*
*குருவின ருள்பெற்றால் கூடலா மந்த*
*நிராமயத்து நின்ற நிலை* 33

தொண்ணூறு மாறுஞ் சோதிதனைக் காட்டாமல்
எண்ணூறு மென்று யிருந்ததுவே நிண்
பரையைக் கண்டந்தவெளி பாத்தேன்கீ ழொன்றுமில்லை
யுரையிறந்து நின்ற விடம் 34

போவாய்நீ யென்றவனார் பொய்யுமெய்யுஞ் சொன்னவனார்
ஆவாய்நீ யென்று அழைத்தவனார்-பாவாகேள்
துன்னைநீ பாரென்றான் உற்ற நடுவணையில்
பின்னைத்தான் காட்டினான் பேசு 35

பூசையென்று சொல்லிப் புலம்பித் திரியாமல்
பூசை கடந்த பொருளறியீர்-பூசைதான்
ஆதியோ அந்தமோ அஞ்செழுத் தென்பதுவோ
தீதிலாச் சற்குருவே செப்பு 36

கவ்வுண்டு நாசிதனைக் காலால் கனலெழுப்பி
வவ்வுதனை வுவ்வாக்க மாட்டாமல்-தெய்வம்
ஒருவனேயென் பான்என்று தூருக் கிவந்து
திரிவரே வீணே தினம் 37

நித்திரையிற் காட்சிதனை நிமைமூடிக் கண்டதுவுங்
குத்திரங்கா ணத்தினையுங் கூடாதே-சித்தமதில்
கண்ணார நாட்டமிட்டுக் காலால் வழிதேடிப்
பெண்ணாரைக் கூடிப் பிழை 38

எதைநினைப்பே நினைந்து எதையுரைப்பே னுரைத்து
எதைய னுதினமு மேற்றுவேன்-தீதுதனை
மாற்றியருளளித்த வாசியா னந்த
முத்தி யருளளித்த முன் 39

கொல்லன் துருத்தி குழல்தனிலே சுக்கிலந்தான்
மெல்லச் சுகோணிதத்தின் மேல்நடுவாய்-நல்ல
நடுவாகி நின்றனை நல்லமலர்ப் பாதம்
யிடமாக நீயிருப்புக் கொள் 40

தாய்மடியி லேயிருந்துதகப்பன் தனையறியுஞ்
சேய்போ லறிவிருந்து சேர்ந்தனாள் ஆயமதில்
ஆனந்த மானமய மன்றுமுத லின்றளவும்
தானந்த மாயமறிந் தநாள் 41

கருவாட்டை மெய்யென்று கதறித் திரியாதே
கருவாட்டைச் சுட் டொன்றைக் கருத்தறியீர்-பெருமாட்டிக்
கற்றமாய் நிற்கும் ஆனந்தந் தானறிந்தால்
யிற்றத்தி லொன்றமில் லை 42

கண்ணுக்கு மெட்டாதுகருத்துக் கடங்காது
விண்ணில் வெளியில் வெளிகாணும்-பண்ணறிய
நற்குருவின் பாதம் நடமாடு மவ்விடங்காண்
யிக்குருவே யக்குரு வாகும் 43

காலையறி யீர்கண் தலையைத் தானறியீர்
மேலைச் சுடலைநிலம் மேவறியீர்-ஆலயத்தைச்
சுத்திவ லம்வருவீர் தோத்திரஞ்செய் கைகூப்பும்
பித்தரையே காணாத பேர் 44

வெட்ட வெளி யில்லுதித்து வெட்ட வெளி யில்பிறந்து
வெட்ட வெளி யில்திரிந்த வீணரே-நட்டம்
பயின்றாடு வாருமாங்கே பாம்வெளியு மங்கே
கயிலாச மங்கைநீர் காண் 45

அவத்தை லுதித்து அவத்தை யினாற்பிறந்து
அவத்தை யினாலறிந்து ஆள்வரே-அவத்தை
சறுவத் திலுமிருக்குஞ் சற்குருவின் பாதம்
யிருகையத்தி நின்மலத்தை நில் 46

சலமூழ்கி னாற்றவளை தான்கரைதா னேறுமோ
சலமூழ்கி னாலமுக்குத் தான்போ-மலமறுக்க
அய்யன ருட்குருவென் அவ்விடத்தி லேமூழ்கில்
மெய்யாக நின்று விரைந்து 47

சாதி பெரிதென்பார் தன்னைத்தா னேயறியார்
சாதிநி ராமயத்திற் றாக்குமோ-சாதியை
நீற்றார் பரவெளியிற் நின்றநிலை காணலாம்
பாத்தானைப் பாத்தானைப் பார் 48

குருக்களென்று சொல்லிக்கு லாவித் திரியாதே
குருக்க ளளித்த குறிப்பறியீர்-குருக்களே
யெங்கே யிருந்தீர்யெவ்விடத்தே மெய்க்கொண்டீர்
அங்கே யிருந்த தறி 49

சாக்கிரத்தைக் கீழ்நோக்குத் தண்டு முனைநடுவில்
ஆற்குந் தெரியாத வானந்தம்-மாநாக்கின்
துனிமேலே மூலமது நுண்ணறிவி லாதபொரு
ளணியறிந்து நிற்கவல்லா ரார் 50

எச்சிலென்று சொல்லி மகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறியீர்-எச்சிலை
யுற்றிருந்து பார்த்தார் ஒருமை வெளிப்படுமே
நிற்றம்நி ராமய மாமே 51

ஆனை பனிரண்டும் அல்லும் பகலோடினால்
சேனைதொண் ணூற்றுவர் சேர்ந்திருப்பார்-ஆனை
நடவாம லேயிருந்தால் நானுமில்லை நீயுமில்லை
திடமா யறிந்தது சேர் 52

வேதாந்தத் துண்மை விளங்கும் பொருளல்ல
நாதாந்த வீடு நணுகாது-போதாந்த
மெய்க்குருவீ தென்று வெளியாக்கிக் காட்டினான்
பொய்க்குருவைக் காணேன் பிரிந்து 53

இருவர் நடந்தவழி யேகாந்தச் சேர்வை
யரிய பொருளிருக்கும் அவ்விடங்காண்-தெரியாது
அருட்குருவைக் கண்டா லஞ்செழுத்துந் தள்ளினால்
வருத்த மலத்தானென் றாம் 54

விந்துவு நாத முமேவுந்தி ருக்கூற்று
அந்தரத்தில் நிற்கு மறியார்கள்-பந்தம்
பிறந்தா லறியலாம் பின்னுமுன்னுந் தள்ளி
யறிந்த விடத்திருக்க லாம் 55

சதிரத்தைக் கொண்டுழன்று தற்பதத்தைக் காணா
உதிரத்தை மெய்யென்றி ழைத்தீர்-யதிர
நடந்தி டமுமங்கே நாதவெள்ளத் தின்பம்
படந்திடமு மங்கேநீ பார் 56

சீலத் திலேயுழன்று சிந்தை கலங்காதே
சீலம் நிராமயத்தில் சேராது-சீலத்தை
விட்டால் பரவெளியில் வெட்டவெளி காணலாஞ்
சிட்டா யிருக்குநர் தெரு 57

மூத்த மகன்பிறந்தான் முந்திச் சுழியெழுத்தில்
பாத்துத் தெரிவார் பலரில்லை-நேத்தியாய்
நல்லோ ரறிவார்கள் நாதாக் களுண்மைதனை
யெல்லோ ரறியா ரிது 58

நானும்பொய் நீயும்பொய் நல்ல சிவானந்தந்
தானு மெய்யென்று சாற்றினான்-நானறிய
நடுவணையில் நில்லேன்றா ணாதன்றி ருக்கூத்தில்
திடமா யிருந்தேன் தெளிந்து 59

சாத்திரத்தைப் பண்ணித் தலையடித்துக் கொண்டேன்யான்
கூறறில் ருட் குரவன் கூடினான்-மூற்தி
யிருந்திடத்தைக் காட்டினான் ஏகாந்த வெள்ளத்
திருந்திடத்தே யென்னையிருத் தி 60

அஞ்சு மல்லயிலது மேலஞ்சு ழியெழுத்தை
நெஞ்சி லழுத்திகுரு நில்லென்றான்-பஞ்சமல
மற்றவிட மேதென்றான் அவ்விடத்தைக் காட்டினான்
சித்தத்தில் கண்டேன் தெளிந்து 61

தேரோடு தென்றுமெத்தத் தேசமெல்லாம் போய்த்திரிவீர்
தேரோடு துள்ளே தெரியிலீர்-வேரோடி
நின்ற நிலையறிந்தால் நிற்பார் சிவானந்த
மன்றே மறப்பா ரதை 62

பூசை யிறந்து புனலா டினதிறந்து
ஆசையனுட் டான மதுவிறந்து-பாசத்தில்
நின்ற நிலையறுக்க என்னை யிரவுபகல்
தன்னை யிருத்தினான் தான் 63

அவத்தை பதினெட்டு மாதா ரமாறும்
பவத்தொழிலைக் கிழப்பவா ரென்றால்-சிவத்தில்
அடங்கினா யானந்த மாதிபார பரைமேல்
முடங்கி யிருந்த முதல் 64

பச்சைமரத் தாணிபோல் பாய்ந்திருந்த மும்மலத்தைத்
தச்சிருந்த மும்மலத்தைத் தானீக்கி-யச்சமில்லாத்
தானின்ற தற்பரத்தைத் தந்தருளி யெந்தனுக்கு
கோனாகி வந்தான் குரு 65

என்னை யறியாம லிற்றவிடத் தேயிருந்தான்
றன்னந் தனியனாய்த் தானிருந்தா-யென்னை
மிழுங்கி யிருந்தபொருள் மோனந் தமானதுவே
பழுதிலா நின்ற பரம் 66

ஆகு சமில்லை யசுத்தத்தில் சுத்தமுண்டு
பேசாத வின்பம் பெறும்பேர்கள்-கூசாதார்
கண்டவிடத் தேயிருப்பார் கண்டவிடத் தேபொசிப்பார்
கண்டவிடத் தேபடுப்பார் காண் 67

பெண்டாட்டி யைக்கொண்டுப் பெருக்கத் தவித்தேனே
கொண்டா னவன்தான் குருநாதன்-அண்டமெல்லாம்
பொய்யடா வென்றான் புருவ நடுவணையில்
மெய்யடா வென்றான் விரைந்து 68

*கனகசபை தேடி கலங்கித் திரியாதே*
*கனகசபை யும்முள்ளே காணீரோ-அனுதினமும்*
*தானிறந்து நின்றநிலை தற்பரத்தைக் காட்டினான்*
*நானிறந்து நின்ற நிலம்* 69

*வெந்தவிடங் கண்டேன் விமலிருந்தவிடம்*
*அந்திபக லற்றவிட லவ்விடங்காண்-சிந்தைதனில்*
*எங்குமி ருந்தபொரு ளென்னிடத்தி லேகண்டேன்*
*கங்குல் பகலற்றுவிடங் காண்* 70

*கண்டதெல் லாமறையுங் காணாதெல் லாம்பிறும*
*முண்டதெல் லாமலயா மொன்றுகேள்-துண்டம்*
*பிறிவை யறியங்கோள் பேச்சுரையு மல்லா*
*வறிவை யறியுங்கோ ளன்று* 71

*இறப்பும் பிறப்பும் இறவா திருந்த தொன்றுஞ்*
*சிறப்புடையோர் காண்கின்ற தேவே-மறப்பில்லார்*
*நாட்டத்தே பற்றிநின்றால் நல்லசிவா னந்தமாக*
*கூட்டி லிருக்குங் குறி* 72

*கிறிகை யதிகமென்று கேடுபட்ட யண்பரே*
*யறிவை யறியாத சடரே-கிறிகையுள்*
*சிற்பரத்தைக் கண்டக்கால் சிந்தை தெளியுமே*
*யுற்பரத்தைக் காணீரொளி* 73

சீயெழுத்தி னாலுதித்து சீயெழுத்தி னாற்பிறந்துச்
சீயெழுத்தி னால்திரிந்த செல்வரே-சீயெழுத்தைப்
பெற்றெழுத்தைப் பாருங்கோள் பேசாப் பெறும்பேறு
உற்றவிடம் பாருங்கோள் என்று 74

சிவனொருத்த னுண்டெனறு திக்குகள் தோறுந்திரிவீர்
சிவனொருத்த ரும்முள்ளோ தேடீரே-அவமதிகள்
மலையில்மே லேயிருந்தும் மலையைக் காண்ணெண்பீர்
நிலமை யறியார் நெறி 75

பெற்றார்பே ரில்லைப் பிறவாதார் பேருண்டு
கற்றார்கள் பெற்றார் கடும்பேறு-சித்தத்தில்
கண்டு தெளியுங்கோள் காணாத மூடரே
கொண்டென்னைச் சொன்னான் குரு 76

கல்லிலுஞ் செப்பிலுங் காய்ந்திரும்பு வெங்கலத்தில்
துல்லா சமாகநீ ரூட்டிநீர் - நல்லார்
பகலு மிரவும் பதிநடுவி லுண்டுங்கோள்
சகலகுருச் சொன்னான் தாம் 77

ஓசை பரிச முருவஞ்சு வைநாற்ற
மாசை யடங்கு மதையறியார்-பாசத்
திருளைப் பிரித்தறிந்தா லெவ்விடத்தே யுற்றாய்
அருளறிவு மொன்றே யறி 78

கோல்காட்டு வானாசான் சீஷன் குருடனைப் போல்
மேலை வெளிகாட் டவெளிகண்டேன்-சீலத்
திருந்தபொரு ளீதென்றா னேகாந்த மாக
மருள்கெடுக்க வந்தான் மகிழ்ந்து 79

தன்சதிரங் கேட்டுத் தற்பனமு மற்சனையும்
முன்னுஞ் சிவபூசை யொண்கேட்டு-பண்ணுமறைப்
பாசத் திருள்கேட்டுப் பராபரத்தி லொன்றாக்கி
நேசத்தா லாசா னெறி 80

தீர்த்தங் கொடுத்தவனார் தீறதம்வடிக் கொண்டவனார்
மூற்தி குருவாய்மு ளைத்தவனார்-தீர்த்தத்தை
லிங்கத் திலூட் டியே யிந்தாவென் றேகுடுத்தீர்
லிங்க மறியா ரிதம்

ஐந்து முகம றியீர்த்துள் நிறமறியீர்
சிந்தை யறிந்தாட்டச்சியலறியீர்-எந்தவிதம்
அய்யோ வரனை யறியாத மூடரே
செய்யும்வகை தானறிந்து சேர் 82

அகர முதலந் ததடங்கி நின்றலிங் கத்தில்
சிகர முதலாய் நடனஞ் செய்த-புகலறிய
அசவை யறியா தசடரே நீங்கள்
மசகமே காணீர் மதித்து 83

ஏனென்ற சத்தமது எங்கே யிருந்துதடா
னானென்று சொன்னவிடம் நாட்டம்-கோனை
யறிவால றிந்தக்கால் அவ்விடத்தைக் காட்டினான்
குறியா யிருந்த குரு 84

வடக்குஆ சூசமென்று தூரத்தே தீண்டா
வடக்கு யிருக்குதடா துன்னிடத்தே-துடக்குச்
சடத்திலிருந் துதந்தம் சற்குருவாய்வந் தபொரு
ளடக்க முடையீ ரறி 85

அவ்விடத்தி லேயிருந்து அங்குதித்துப் பிண்டமாய்
அவ்வெழுத்தி னாற்சடந்தா னானதே-யவ்வெழுத்தைத்
தள்ளிப் பராபரைமேல் தற்சூதா னந்தவெள்ளம்
மெள்ள அடமுந்தீர் விரைந்து 86

எட்டாத கொம்பில் யிருக்கும் பராபரத்தை
முட்டாக்குப் போட் டொருபெண் மூடினாள்-கிட்டிக்
கருந்திரையை யுண்டுழந்து காட்டினா னெந்தன்
குருவாகி வந்த குறி 87

ஊனெடுத்த பேற்கெல்லா முண்ணிறைந்த பேரின்பம்
நானிடத்தி லேயிருந்த நாட்டயங்கே-கோனே
யுள்ளும் புறம்பு மொடுங்கும் நடுவணையில்
மெள்ள விருப்பான் விரைந்து 88

நிராமயமாய் நின்றபொருள் நேரிழையாள் தன்மேல்
குராமயமாய் நின்று குலாவித்-தராதலத்தில்
எறும்புகடை யானைமுதலெவ் வுயிர்க்குமேனி றைந்த
யுறுமுதலைக் காணீரு கந்து 89

உழுது சடமெடுத்த ஊமரே கேளீர்
உழுதாச் சடத்துகளை யோட்ட-அழுதால்
சிவனை யறியலாஞ் சிற்சொரூபங் காணலா
மவனை யணைந்தே யறி 90

குருநாவே ததண்டாகக் கொள் சீ உரண்செவி யோனி
அருள்நாமுற் பத்தியானதுவே-மருள்கெடுத்து
மும்மலத்தை வாங்கியென்னை மோனந்த வெள்ளத்தில்
அம்மலனா யானந்த மூந்தி 91

பூசைப்பேய் கொண்டு புவிவடங்கி லும்பொய்யாய்
பாசப்பேய் கொண்டு பதையாதே-நேசத்
திருப்பானைப் பாத்திருங்கோள் யிம்மைமறு மையில்
குருப்பாதம் காணுங் கொண்டு 92

என்னிடத்தில் நீவந்தால் நீநானு மொன்றுகாண்
பின்னமற வொன்றாய்ப் பெறலாமே-உன்னறிவி
லறியா திருந்தபொரு ளாசானிடத் திருக்குங்
குறியா யிருந்தவனைக் கொள் 93

உள்ளோ புறம்போ ஒருவனி ருந்தவிடம்
உள்ளும் புறம்பில் யுயிர்நடுவில்-எள்ளெண்ணை
போலே யிருப்பான் புவியடங்கிலு முயிரில்
மேலே யிருப்பான் விரைந்து 94

அரைத்தமஞ்சள் போலே பற்றுமாற்று மாவின்னறிவு
உரைத்தான் பொருளொன்றுப தேசம்-கருத்தை
யொன்றாக் யானந்தத் துள்ளமுந்தி மேல்வீட்டில்
நின்றென்னும் போக மாய 95

எங்குந் திரிந்தலுத் தேன்யிருவினையினால் மயங்கி
பொங்குஞ் சிவபோதும் போதித்தான்-கங்குபக
லற்றவிடங் காட்டியென்னை அதனுள மூத்தினான்
பெற்றேன் பெறும்பேறு தான் 96

திருவம் பலக்குரவன் தேசிகனைக் கண்டால்
கருவம் பலத்தொளிக்கக் காட்டானே-உருவா
யெடுக்காத பேரின்ப மேகாந்த வெள்ளத்
துடுக்காய்த் திரித்தினான் சொல் 97

சிற்சுருப மான திருவம்ப லக்குரவன்
மெய்ச்சுரூப மான வெளியுள்ளே-தச்சுருபங்
காட்டி யருளளித்துக் கங்குல் பகலற்றவிட
மூட்டியெ னையமுத்தி னான் 98

அனுஷ்டானம் பூசையஞ்செழுத்துமேதொளிகாண்
முனித்தான்வெள் ளத்தில்மூழ் கீரே-யினித்தான்
குருபரனைச் சேர்ந்தக்கால் கூடலாம் பின்னும்
இருவருமா மொன்றா மினி 99

கண்டிடமுங் கேட் டி டமுங்கருத் தில்நினைந்திடம்
முண்டி டமும்பரிசத்துறைந் திடமும்-பிண்டத்
தறிவிப்பா னாசான் அவனருளைப் பெற்றால்
குறியாகி நிற்கலாங் கொண்டு 100

சுக்கிலத்தை விட் டுச் சுறோணிதத்தி னால்கட்டி
மிகச்சடமெடுத்த வீணரே-மெய்க்குருவைக்
கண்டால் பரமபதங் காட்டுவா னாசானை
யுண்டால் பரபோக மாம் 101

ஆசார மில்லாரருளில்லா தனமில்லா
தேசா பாவகமாகி யேதிரிவார்-நேசத்
திருளைப் பிறந்தறியார் ஈடேற மாட்டார்
குருவை யறியார் குணம் 102

உன்னிருக்கு மோருபொருளைத் தேடாமல்
பின்னையொரு தெய்வம் பிதற்றறீர்-யின்னம்
அறிவானைக் கொண்டு அறியோங் களாசான்
பிறவாத யின்பத்தின் பேறு 103

தேறுதில்லைத் தேசம் தெளியுதில்லைச் சிந்தைசுற்று
மாறுதில்லைக் கன்ம மகலுதில்லை-கூறரிய
தேரடிக்கே நின்று திகைக்குதிப்போ செய்வதென்ன
மாரடிக்கக் கண்ட மனம் 104

தன்னை யிழந்தோ வாரதற்சு தானந்தத்தே
யென்னூலின் யானுரைத்த தெத்தன்மை-மன்னுலகில்
பானு மிருளோட்டும் பண்பதுபோல் மின்மின்னித்
தூனு மிருளோட்டு மோதான் 105

சமையம் பனிரண்டில் தங்கும் நிராமயத்தை
சமையம் பிரித்தவர்கள் தானறியார்-அடையாமல்
ஓடித் திரிந்து உலையாதே யுன்னறிவில்
தேடி மனத்துள்ளே தெளி 106

அஞ்செழுத்து மூன்றெழுத்து மன்பத்தோ ரட்சரமும்
பஞ்சாச்சரத் தையுன்னிப் பதையாதே-நெஞ்சி
லழுத்துங்கோ ளாசான் அவனருளைப் பெற்றால்
எழுத்துவிட்டு ஏகாந் தமாம் 107

நாட்டிச் சிவபதத்தை நம்பாதே சிற்பர்மேல்
ஓடிக் குருபதத்தை யுட்கொள்ளீர்-தேடித்
திரியாதே தேசமெங்குஞ் சித்தத்துள் கண்டு
அரிய நிராமயமா மன்று 108

பாலைக் குடித்துப் பலகனியைத் தின்றாலென்
சீலக்கி ரிகையிலே சேர்ந்தாலென்-மூலத்
திருந்தபொருள் காணாத யேழைகாள் நீங்கள்
பருத்திபட்ட பாடு பலன் 109

குன்றிற் கிடந்துங் குகையிருந்துங் கோலங்கள்
பன்றித் திரிந்தால் பலனுண்டோ-நரியன்ற
ஆசானைக் கண்டு அவனருளைப் பெற்றக்கால்
பாசங் கடந்திருக் கலாம் 110

புற்றின்றும் பால்குடித்தும் போந்த சருதின்றும்
கற்குகையி லேயிருந்துங் கண்டீரோ-குருவை
மறவாம லேயிருந்தால் மாண்டவிடங் காணலாம்
பிறவாத யின்பத்தின் பொருள் 111

உரையிறந்து நின்றவிட மும்பருக்க மெட்டா
கரைகடந்து யின்பவெளி காட்டிப்-பகையிறந்த
பாழ்வீட்டுக் குள்ளே பராபரனு நானுமாய்
வாழலாம் வாழ்ந்தேன் மதித்து 112

ஆவென்று சொன்னசத்தம் அங்கே யிருந்ததுகாண்
ஓவென்று வீசனது ஓங்காரம்-வாவென்று
பாழ்விட்டுக் குள்ளே பாதையாம லேயழுந்தேன்
வீழாத யின்பத்தின் வீடு 113

துரிய மிறந்து சொல்லிறந்த தூய்வெளியை
குரவன் வழிகாட்டக் கூட்டினேன்-யிரவுபகல்
அற்றவிடங் காட்டியென்னை யதளழுத்தினால்
சற்றங் குவிந்தவிதந் தான் 114

உற்ற சமையம் பனிரெண்டி லுற்றமனை
பெற்றவர்கள் கண்டிருப்பார் பேசார்கள்-சுற்ற
அரிய பொரு ளறிய அநேகநாள் செல்லுமே
விரிந்து குவிந்த விடந்தான் 115

கொல்ல னுலையிரும்பில் குருகுநீர் தான்சுவரில்
தில்லைத் திருப்பாதச் சீர்மைபோல்-நல்ல
சிவஞானம் போய்த்திரும்பார் சித்தயிக் கியமாம்
அவம்போகா தென்றே யறி 116

அரங்கொண்டி ரும்பையறுக் கின்றவா றுபோல்
குரவன் மலமறுத்துக் கூட்டு-திரமுடனே
யைந்தொ ழிலும்நட் டமாறா தாம்நட்டஞ்
சிந்தையுட னவ்விடத்தே சேர் 117

சைவற்கா சூசந்தா னுண்டுசங்க மற்கு
மெய்யாக ஆசூ சமில்லைகாண் பையரவம்
பூண்ட பனமற்கில்லை பொருளறியா மோடரே
யாண்டவனைக் கொண்டே யறி 118

நானென்றும் நீயென்றும் நாடிய தொன்றென்று
மேனென்ற தொன்று மியம்பக்கேள்-தானின்று
சொல்லிற் றதுமாகிச் சுகமுமவ னாகி
பலவிதங் களாகும் பரம் 119

அண்டரண் டங்களுக்கு மணுவாகி நின்றபிரான்
தொண்டர் தமக்குஞ் சுகமாகி-கண்டுதொழ
அந்தக் கரண மடக்கிய தில்மூழ்கி
பந்தம் பிறந்திருப்பார் பார் 120

பட்டி னிவிட் டொடுங்கிப் பால்குடித்துச் சாதித்து
எட்டி யுணர்ந்திருப் பாரு வெல்ல-திட்டமுடன்
உண்டுடுத்துப் பூசிமுடித் துத்தமனைச் சித்தித்தே
கண்டிருக்க ஞானி கடன் 121

மூன்றெழுத்து மொன்றாய் முடிந்த முழுமுதலை
யீன்றபிர வைத்தினிப் பொருளைத்-தாணாகக்
காட்டினா னந்தக் கரணம் புரியவே
கூட்டினா னெந்தை குரு 122

ஓங்கார நாதமொ ளிக்குளுற வொடுங்கி
ஓங்காரந் தன்னை யுறவிட்டுப் - போங்கலாம்
ஒன்றாகு மந்தவொரு பொருளெபண்ணுமே
நன்றாகும் ஞான வொளி 123

*ஒளியி லொளியை ஒளியான தொன்றை*
*வெளியில் வெளியை வெளியான மெய்யைத்-தெளியாமல்*
*மண்ணிட்டு நீறிட்டு மாய்வரே மெய்ஞ் ஞானக்*
*கண்ணிட்டுக் காணா தவர்* 124

*மூல முறுநெருப்பும் முக்கோணத் துள்ச்சிவமும்*
*காலுந் தலையுங் கலைமதியுஞ்-சாலவே*
*நெஞ்சகத்தை விட் டொருநாள் நீங்கா துகாண்கெடுவீர்*
*மிஞ்சயினிப் பாராய் தெல்லாம் வீண்* 125

*நாசித் திலையறிந்து நற்கருணைக் கால்பிடித்து*
*வாசியைக் கொண்டே றமாட்டாமல்-பேசியே*
*தலைவழித்து நீர்மூழ்கித் தாவடங்கள் பூண்டு*
*அலைவதனா லென்னா மடா* 126

*காத்துக் கசையாது காணலுக்கு வாடாது*
*ஆத்துப் புனலு ளடங்காது-வேத்துருவாய்க்*
*கூட்டியி ருக்குங் குருவான வானந்தம்*
*வீட்டிலி ருக்கும் விளக்கு* 127

*சாகாமல் தாணிறந்து சற்குருவின் சன்னதியில்*
*வேகாமல் வெந்திருக்க வேண்டாமோ-போகாமல்*
*மண்டபத்துள் புக்கிமறை ஞானத்துட் பொருளைக்*
*கண்டிடத்தே கண்டிருப்பர் காண்* 128

சுத்தா திசுத்தமென சுத்த வெளிப்படையாய்
சித்தந் தனையாய்ந்து சேராதார்-மெத்தயினி
விண்டதினா லென்ன விரைத்திருகண் மூடியென்ன
கொண்டதினா லென்ன குறி 129

அவரவர்க்கு உள்ளபடி யீசனரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று மாணா-லவரரை
நல்லார் பொல் லாரென்று நாடுவதென் னெஞ்சமே
யெல்லாஞ் சிவன்செய லென் 130

கூட்டுவதுங் கூட்டிப் பிரிப்பதுவு மொவ்வொன்றையும்
யாட்டுவது மாட்டி யடக்குவதுங்-காட்டி
மறைய்துவுங் கண்ணுதலோன் முன்னமைத்த
யேட்டின் படியென் றிரு 131

விட்ட குறையும் விதியும் நமக் குண்டானால்
எட்டும் இரண்டும் வந் தெய்தாதோ-முட்ட
விதியிலி யேனாகி வீணாசைப் பட்டால்
மதியிலதாற் குண்டோ வழக்கு 132

எட் டெழுத்தும் பத்தெழுத்து மேழெழுத்து மஞ்செழுத்து
தொட் டெழுத்தி னூடே தொடர்பெழுத்தும்-கிட்டரிய
பாதந் தனைத்தேடி பத்திசெய்ய மாட்டாமல்
வேதம் படிப்பதெல்லாம் வீண் 133

திருச்சிற்றம்பலம்

ஞான வெண்பா முற்றும்

சிவசண்முகஞான தேசிகன் திருவடி வாழ்க.

# பாடல் முதற்குறிப்பு


| அ | பாடல் எண் |
|---|---|
| 1. அஞ்சுமலை | 61 |
| 2. அஞ்செழுத்து | 6 |
| 3. அஞ்செழுத்தும் | 18 |
| 4. அஞ்செழுத்து | 107 |
| 5. அண்டரண்ட | 120 |
| 6. அவ்விட்டு | 7 |
| 7. அவ்விடத்திலே | 86 |
| 8. அவ்வைப்படைத் | 11 |
| 9. அகரமுதல | 83 |
| 10. அயர்த்தெளிவும் | 19 |
| 11. அரங்கொண்டு | 117 |
| 12. அரைத்த | 95 |
| 13. அவரவர்க்கு | 130 |

14. அவத்தை 46

15. அவத்தை 64

16. அனுஷ்டானம் 99

## ஆ

17. ஆசா ரமில்லா 102

18. ஆறாதரத் 5

19. ஆசூசமில்லை 67

20. ஆவென்று 113

21. ஆணைப்பனிரண்டும் 52

## இ

22. இறப்பும் 72

23. இராகுவென்று 20

24. இருவர் நடந்த 54

## ஈ

## உ

25. உள்ளொ 94

26. உற்ற சமையம் 115

27. உன்னிருக்கு 103

28. உரையிறந்து 112

**ஊ**

29. ஊனேடுத்த 88

**எ**

30. எங்குத்திரிந்த 96

31. எச்சிலென்று 51

32. எட்டாத 87

33. எட்டெழுத்தும் 133

34. எந்தவகை 26

35. எல்லா வுயிர்க்கு 10

36. என்னிடத்தில் 93

37. என்னையறி 66

38. எதை நினைப் 39

## ஏ

39. ஏன்தான் 4

40. ஏனேன்றசத்தமது 84

## ஐ

41. ஐந்து முகமறியீர் 82

## ஒ

42. ஒளியிலொளியை 124

## ஓ

43. ஓங்கார நாத 123

44. ஓரேழுத்தைக் 8

45. ஓசை பரிச 78

## க

46. கண்டிடமுங் 100

47. கண்டதெல்லா 71

48. கண்ணுக்குமெட்டா 43

49. கல்லிலுஞ் 77

| | |
|---|---|
| 50. கவ்வுண்டு | 37 |
| 51. கனகசபை | 69 |
| 52. கருவாட்டை | 42 |
| 53. கருவிகழன்றிடமுங் | 31 |
| 54. காத்துக் கசையாது | 127 |
| 55. காயங்கழன்றிடமுங் | 33 |
| 56. காயுங்கிழங்குங் | 29 |
| 57. காலையறியீர் | 44 |
| 58. கிறிகை | 73 |
| 59. குன்றிற் | 110 |
| 60. குருக்களென்று சொல்லிக் | 49 |
| 61. குருநாவேத | 91 |
| 62. கூட்டுவதுங் | 131 |
| 63. கொல்லன் | 40 |
| 64. கொல்லன் | 116 |
| 65. கோல்காட்டு | 79 |

## ச


| | |
|---|---|
| 66. சந்தியென்றும் | 9 |
| 67. சலமூழ்கினாற் | 47 |
| 68. சதிரத்தைக் | 56 |
| 69. சமையம் | 106 |
| 70. சாக்கிரத்தைக் | 50 |
| 71. சாத்திரத்தின் | 27 |
| 72. சாத்திரத்தைப் | 60 |
| 73. சாகாமல் | 128 |
| 74. சாதிபெறி தென்பார் | 48 |
| 75. சிற்சுரூபமான | 98 |
| 76. சிவத்தையறியீர் | 12 |
| 77. சிவனொருத்தன் | 75 |
| 78. சீலத்திலே | 57 |
| 79. சீயெழுத்தினாலுதித்து | 74 |
| 80. சுக்கிலத்தை | 101 |
| 81. சுத்தாதி | 129 |
| 82. சைவற்காகுந் | 118 |
| 83. சொல்லு மெமக்கு | 22 |

## த


| | |
|---|---|
| 84. தண்ணிக்குள் | 16 |
| 85. தன்சதிரங் | 80 |
| 86. தன்னையறிவித்தான் | 1 |
| 87. தன்னையிழந்தோ | 105 |
| 88. தாய்மடியிலேயிருந்து | 41 |
| 89. தானறிந் தாப்போலே | 30 |
| 90. திருவம்பலக் குரவன் | 97 |
| 91. தீர்த்தங் கொடுத்தவனார் | 81 |
| 92. துரவரிறைவர் | 25 |
| 93. துரியமிறந்து | 114 |
| 94. துழுதுசடமெடுத்த | 90 |
| 95. தேறுதில்லை | 104 |
| 96. தேரோடு தென்று | 62 |
| 97. தொண்ணூறு | 34 |
| 98. தோப்பழுத்து | 24 |

## ந


| | |
|---|---|
| 99. நவ்வாலு | 13 |
| 100. நரகத்திலே | 14 |
| 101. நாட்டிச் சிவபதத்தை | 108 |
| 102. நாசித்தலை யறிந்து | 126 |
| 103. நானிருந்து | 3 |
| 104. நானும் பொய் | 59 |
| 105. நானென்றும் | 119 |
| 106. நித்திரையிற் | 38 |
| 107. நிராமயமாய் | 89 |
| 108. நினைந்து | 21 |


## ப


| | |
|---|---|
| 109. பச்சைமரத் | 65 |
| 110. பட்டினி | 121 |
| 111. பாலைக் குடித்துப் | 109 |

112. புற்றின்று 111

113. பூசை யென்று 36

114. பூசையிறந்து 63

115. பூசைப்பேய் 92

116. பெண்டாட்டி 68

117. பெற்றார் 76

118. போவாய்நீ 35

## ம

119. மாங்கீவுத்திலே 23

120. மாயிறீர் 15

121. மூத்தமகன் 58

122. மூன்றெழுத்து 122

123. மூலமுறுகெருப்பும் 125

124. மெய்க்குருவைத் 2

## வ


| | |
|---|---|
| 125. வடக்கு | 85 |
| 126. வாய்பேசா | 28 |
| 127. விட்டகுறையும் | 132 |
| 128. விட்டிடமுந் | 32 |
| 129. வித்திலே | 17 |
| 130. விந்துவு | 55 |
| 131. வெட்டாத | 0 |
| 132. வெட்டவெளியில் | 45 |
| 133. வெந்தவிடங் | 70 |
| 134. வேதாந்தத்து | 53 |

# சொல்லடைவு


| சொல் | பா.எ |
|---|---|
| அஞ்சு | -61 |
| அஞ்செழுத்தும் | -6-18-107 |
| அண்டம் | -68 |
| அண்டாண்ட | -120 |
| அந்தமில்லா | -26 |
| அந்தரத்தில் | -53 |
| அந்தகாணம் | -110 |
| அய்ந்து | -9 |
| அல்லும் | -31 |
| அவ்வை | -11 |
| அவ்வாலும் | -13 |
| அவ்விடம் | -44-84 |
| அவ்விட்டு | -7 |
| அவ்வெழுத்தை | -86 |
| அற்சனை | -80 |
| அன்பன் | -5 |
| அன்று | -18 |
| அசவை | -83 |
| அடங்காது | -43 |
| அடங்கி | -64 |
| அடங்கியதில் | -120 |
| அரங்கொண்டு | -117 |
| அவம் | -10-12 |
| அவத்தை | -46-64 |
| அவரவர்க்கு | -130 |
| அகாரமாய் | -8 |
| அணி | -50 |
| அதின்கீழே | -7 |
| அதிர | -56 |
| அறி | -108 |
| அறிய | -49-78 |
| அறிவித்தான் | -2 |
| அறிவால் | -84 |
| அறிந்தில்லை | -12 |

| | | | |
|---|---|---|---|
| அறிந்து | -117 | ஆவாய் | -35 |
| அறிவை | -71 | ஆணிபோல் | -65 |
| அறியார் | -55 | ஆதி | -36 |
| அனுதினமும் | -69 | ஆசுசமில்லைகாண் | -118 |
| அனுஷ்டானம் | -99 | ஆசை | -63 |
| அசையாது | -127 | ஆசை | -52 |
| அழைத்து | -7-35 | ஆவென்றும் | -113 |
| அலைவது | -126 | | |
| | | இந்தா | -81 |
| ஆக்கிவித்தான் | -13 | இப்போ | -104 |
| ஆண்டவனை | -118 | இம்மை | -93 |
| ஆற்வர் | -46 | இல்லை | -104 |
| ஆற்கும் | -50 | இன்பத்தில் | -104-113 |
| ஆயநிராமயமாய் | -35 | இன்பம் | -56 |
| ஆயமதில் | -41 | இன்னம் | -103 |
| ஆலயம் | -44 | இடந்து | -110 |
| ஆனந்த | -41 | இடமறியீர் | -51 |
| ஆசானொருவன் | -9 | இடமாக | -40 |
| ஆசாரம் | -12 | இடம்காணலாம் | -111 |
| ஆதாரம் | -64 | இடமாக | -40 |

| | |
|---|---|
| இரண்டும் | -20 |
| இழந்த | -105 |
| இறப்பும் | -72 |
| இறவாத | -72 |
| இராகு | -20 |
| இரிதம் | -81 |
| இனித்தான் | -99 |
| இனியொருவர் | -0 |
| இருக்கும் | -87-85 |
| இருந்த | -93-34 |
| இருந்தோரை | -64 |
| இருப்பான் | -94 |
| இருவினை | -96 |
| இறைவனை | -10 |
| இறையாத | -0 |
| இருபொழுதும் | -24 |
| உண்டால் | -101 |
| உண்மை | -16-51 |
| உண்டோ | -152 |
| உள்ளோ | -94-88 |
| உற்றபரம் | -73 |
| உற்றவிடம் | -74 |
| உற்றிருந்து | -51 |
| உன்னிடத்தே | -85 |
| உன்னிருக்கும் | -103 |
| உடல் | -15 |
| உதிரத்தை | -56 |
| உருவம் | -78 |
| உரையிறந்து | -112 |
| ஊமரே | -90 |
| ஊனெடுத்த | -88 |
| ஈசுவரனை | -4 |
| ஈடேருவீர் | -29 |
| எங்கே | -11-84-49 |
| எச்சில் | -51 |
| எட்டாத | -0-87 |

எண்ணி -16-25

எண்ணூறு -34

எந்தவகை -26-30

எந்தனுக்கு -65

எய்தாத -132

எல்லாம் -130

எள்ளெண்ணை -94

என்பதுவோ -36

என்ன வரும் -19

என்பான் -37

எறும்பு -89

எதைநினைப்பேன் -39

எதையுரைப்பேன் -39

எதையனுதினமும் -39

எடுக்காத -97

ஏகாந்த -97

ஏழேழுத்தும் -133

ஐந்து -82

ஒன்றாய் -122

ஒன்றாகி -80

ஒளி -73

ஒளியிலொளியை -124

ஒருவர் -0

ஓடி -108

ஓவென்று -

ஓரேழுத்தும் -7-8-11

ஓசை -78

கங்கு -96-97-98

கங்குல் -29

கண் -44

கண்டது -38-71

கண்டவிடம் -

கண்ணா -38

கண்டால் -97-101

கண்டிடமும் -111

கண்டிருக்க -121

கண்டிடத்தே -128

கண்டிருப்பார் -128

| | |
|---|---|
| கண்ணிட்டு | -124 |
| கண்டு | -28-120 |
| கண்ணுதலோன் | -131 |
| கண்டேன் | -70 |
| கல்லிலும் | -76 |
| கற்குகையில் | -111 |
| கடன் | -121 |
| கதறி | -42 |
| கமலம் | -5-8 |
| கலந்து | -23 |
| கலங்காதே | -57-69 |
| கழன்றிடமும் | -33 |
| கனம் | -17 |
| கனல் | -37 |
| கனகசபை | -69 |
| கனவு | - |
| கயிலாசம் | -45 |
| கனியும் | -29 |
| கருத்திரையை | -86 |
| கருத்தை | -96 |
| கருவம் | -97 |
| கருத்தில் | -111 |
| கருவி | -31 |
| கறைகடந்து | -112 |
| காட்டாமல் | -34 |
| காட்சி | -38 |
| காட்டி | -20-112 |
| காட்டினன் | -61 |
| காட்டினான் | -53-84-87-37 |
| காண் | -45-92-128 |
| காண்பார் | -31 |
| காண்கின்ற | -72 |
| காண்பொனா | -17 |
| காத்து | -17 |
| காணலாம் | -14 |
| காணலாம் | -57-111 |
| காயம் | -31-33 |
| காயத்துள் | -29 |
| கானல் | -127 |
| காசாகுமோ | -12 |

| | | | |
|---|---|---|---|
| காணாத | -29-44 | குறி | -2-129 |
| காணாமல் | -56 | குறியார் | -93 |
| காணாததெல்லாம் | -71 | குடுத்தீர் | -81 |
| காணாதவர் | -125 | குரு | -3-26-27-84 |
| காணீர் | -83 | குருக்கள் | -49 |
| காயுங்கிழங்கும் | -29 | குருடன் | -79 |
| காணேன் | -53 | குருபரனை | -99 |
| காதைமூடீர் | -76 | குருநாதன் | -68 |
| காலை | -44-7 | குருவை | -102 |
| கிழங்கு | -29 | குகையிறந்து | -110 |
| கீழ்ணோக்கு | -50 | குறையும் | -132 |
| கீழோன்றும் | -34 | கூட்டி | -72-127 |
| கும்பித் | -15 | கூட்டுவதுங் | -131 |
| குன்றீர் | -110 | கூம்பு | -44 |
| குடல் | -15 | கூரிய | -104 |
| குணம் | -102 | கூசாதார் | -67 |
| குழல்தனில் | -40 | கேதுவென்று | -20 |
| குராமயமாய் | -89 | கைக்கொண்டான் | -3 |
| குடித்து | -109 | கைவெளியாய் | -5 |
| குடித்தும் | -111 | கொண்டேன் | -118 |

கொல்லன். -40
கொல்லனுலை -116
கொடுத்து -3
கொழுந்தெழுந்து -3
கோல் -79
கோமளவா -28
கோலங்கள் -110
கோளெல்லாம் -27
கோனே -88

சக்கரம் -1
சட்டி -21
சத்தம் -84
சந்தி -9
சற்குரு -85
சற்குருவை -111
சற்குருவின் -126-128
சன்னதியில் -129
சகல -78
சடத்தில் -85
சடம் -90
சரம் -
சலம் -47
சடாட்சரமே -10
சதிரம் -56
சருகுதின்றும் -111
சாக்கிரத்தை -50
சாத்திரம் -25-60-21
சார்பு -27
சாலவே -125
சாகாமல் -128
சாராதார் -21
சாதித்து -121
சாதிநிராமயத்தில் -48
சாதபெரிதென்பார் -48
சாதியை -48
சிட்டா -57
சித்தத்தில் -61-76
சித்தமதில் -38
சித்தநீர் -12

| | | | |
|---|---|---|---|
| சித்தித்தே | -121 | சீலக்கிரிகையிலே | -114 |
| சித்தந்தனை | -129 | சீரெழுத்தினால் | -74 |
| சிந்தை | -57-104-83-117 | சீரெழுத்தில் | -8 |
| சிந்தைதெளியுமே | -74 | சுக்கிலத்தான் | -40 |
| சிவ்வாலும் | -13 | சுத்தமுண்டு | -67 |
| சிற்பரத்தை | -73 | சுகமாகி | -120 |
| சிற்சொரூபம் | -90-98 | சுவரில் | -105 |
| சிகரம் | -83 | சுருக்கியே | -27 |
| சிவம் | -8-64 | சுறோணித் | -101 |
| சிவனை | -90 | செம்பிலும் | -77 |
| சிவபதத்தை | - | செய்த | -28-83 |
| சிவமயம் | -14 | செய்தால் | -25 |
| சிவத்தை | -12 | செய்வதென்ன | -104 |
| சிவஞானம் | -18-117 | செல்வரே | -74 |
| சிவபூசை | -80 | செல்லும் | -105 |
| சிவனொருவன் | -75 | சென்று | -3 |
| சிறப்பு | -72 | செனனமெடுத்தீர் | -3 |
| சிவானந்தம் | -59 | சேர்ந்திருப்பார் | -53 |
| சீர்மை | -116 | சேய் | -41 |
| சீலம் | -28-57 | சேர் | -53-82 |

சேர்ந்தவை -54
சேர்ந்தாலேன் -109
சேர்ந்தவா -13
சேராமல் -15
சேராதார் -128
சேனை -52
சைவர் -118
சொல்லிறந்த -114
சோதிதனை -34

ஞானவெளி -12
தச்சுரூபம் -98
தண்ணி -16
தந்தை -25
தற்பதம் -56
தற்பதம் -69
தற்பனம் -80
தன்னை -2-105
தகப்பன் -41
தசடரே -83
தவம் -10-12
தவஞானி -18
தனமில்லா -102
தலை -44-126
தாய்மடி -41
தானறிந்தான் -36
தானறிந்து -30
தானறியீர் -44
தானஎனபிரான் -1
தானிறந்து -69-128
தானீக்கி -65
தானும் -59
திக்குகள் -75
திட்டம் -14
திட்டமுடன் -121
தில்லை -116
தின்றாலென் -109
தின்று -29
திடமாயறிந்து -52-39
திடமும் -31

திரமுடனே் -117
திறந்து -63
திரிந்த -45
திரிவரே -37
திரியாமல் -36
திரியாதே -49-69
திரிவார் -102
திரிவீர் -75
திருத்தப்பொருள் -79
திருப்பாணைப் -92
திருவம்பலக்குறவன் -99
திருவன் -97
திகைக்கும் -104
தீண்டாரே -83
தீர்த்தத்தை -81
தீற் -25
தீதுதனை -39
தீரும் -19
துடக்கு -85
துணிமேல் -50
துடுக்காய் -97
துருத்தி -40
தூய் -104
தெய்வம் -37
தென்னன் -1
தெரியாது -54
தெளியுதில்லை -104
தேற்றான் -19
தேற்றினார் -9
தேசம் -95-104
தேசமெல்லாம் -62
தேவாரம் -1
தேசிகனை -97
தேடி -2-104-108
தேடீர் -75
தேயு -15
தேடு -2
தேவே -72
தேறுதில்லை -104
தேரோடுதென்று -32

தொட்டெழுதி -133
தொண்ணூறு -34
தொல்லுலகில் -25
தோத்திரம் -44
தோப்பழுத்து -24

நட்டம் -45
நண்பரே -14
நண்ணறிய 110
நம்பாதே -108
நல்ல -25-40-59
நல்வெளியில் -3
நல்லோர் -58-22
நல்வாலும் -13
நடந்திடமும் -56
நரகம் -14
நடு -59
நடுவன் -23
நணுகாது -54
நாட்டம் -38-88-84
நாட்டத்தே -72
நாட்டி -108
நாள் -41
நாதம் -55
நாளளவே -3
நானழிந்து -3
நானறிய -69
நாணாமல் -2
நாதாந்த -53
நாதவெள்ளம் -56
நாசி -37-126
நானிடத்திலே -88
நானிறந்து -69
நானிருந்து -3
நாடுங்கால் -2
நாடுவதேன் -131
நானும் -112
நானுமில்லை -52
நித்திரையில் -38
நில் -46

நில்லென்ற -59
நிற்பரம் -6
நிற்பது -16
நிற்க -50
நிற்கும் -42-85
நிற்றம் -51
நிற்பார் -62
நிற்கலாம் -100
நின்ற -62
நின்று -89
நின்றதுவு -16-21
நின்றாப்போல் -16
நின்றதற்பின் -24
நின்றடமும் -33
நின்றனை -40
நின்மலம் -46
நின்றநிலை -48
நின்று -47
நின்ற நிலை -70
நின்றபிரான் -120
நின்றபொருள் -84
நின்றென்னும் -95
நிலமை -75
நிறம் -82
நிராமயம் -33-48-51-57
நிலையறியாத -26
நிலையறிந்தல் -62
நினைத்திடம் -100
நீங்கா -32
நீர் -9
நீபாரேன்றான் -35
நீபோகாதே -2
நுண்ணறிவில் -50
நெக்குருகு -2
நெஞ்சகம் -6
நெஞ்சில் -61
நெஞ்சி -107
நெறி -80
நேத்தியாய் -58
நேசம் -102
நேசத்தால் -80

பச்சைமரம் -65
பஞ்சாக்கரத்தை -107
பட்டினி -121
பண் -43
பத்திசெய்ய -133
பத்தெழுத்து -133
பந்தம் -55-120
பன்றி -109
பகல் -39-70
பகலும் -22-77
பகலற்ற -98
படந்த -56
பரம் -67-129
பரர்பரம் -20
பரவெளியில் -64
பலக்கணியை -109
பலவிதங்கள் -119
பவத்தொழில் -64
பராபரத்தை -86
பசி -21
பனிரண்டில் -106
பருத்திபட்ட -109
பழுதில்லா -66
பதையாமலே -113
பரைமேல் -64
பாத்திருந்தால் -21
பாத்து -58
பாம்பும் -20
பாய்ந்திருந்த -65
பார் -56-120
பார்த்தால் -51
பால் -109
பால்குடித்து -111-121
பாழ்மனை -3
பாழ்வீடு -113
பாசப்பேய் -92
பாசம் -78-110
பாசத்தில் -63
பாதம் -43-133
பாவாகேள் -35

பாவை -16
பிண்டம் -100
பிண்டமாய் -86
பித்தர்கள் -28
பித்தரே -12
பித்தனை -44
பிள்ளைகளும் -29
பிற்றான் -1
பின்னும் -16-99
பின்னை -13-22-33
பிறமனுடன் -6
பிறவி -34
பிறந்து -14-22
பிறப்பதும் -19
பிறபலங்கள் -25
பிறப்பு -72
பிறவாத -103-112
பிறந்திருப்பார் -120
பிரான் -1
பிரிந்தக்கால் -14
பிரித்தறிந்து -78
பிரிந்தவர்கள் -106
பிறிவை -71
பினி -99
பிழை -38
பிறை -133
பின்னேயோர் -1
புற்றிற்றும் -111
புஷ்பம் -0
புகல் -82
புணல் -3
புறம்பில் -94
புவி -92
புருவம் -68
பூண்ட -108
பூண்டவகை -26
பூண்போனா -17
பூண்டு -126
பூசை -0-36-63
பூசைப்பேய் -92

| | | | |
|---|---|---|---|
| பெண்ணாரை | -38 | பேசியே | -126 |
| பெற்றார் | -76 | பேரின்பம் | -88 |
| பெற்றான் | -8 | பேருண்டு | -9-76 |
| பெற்றால் | -101 | பேறு | -13-103 |
| பெற்றேன் | -96 | பேரேழுத்தை | -7 |
| பெற்றவர்கள் | -105 | பொங்கும் | -96 |
| பெற்றெழுத்தை | -74 | பொய்யென்று | -23 |
| பெறலாம் | -10 | போந்த | -111 |
| பெரிதென்று | -48 | போய்த்திரிவீர் | -62 |
| பெருமாட்டி | -42 | போய்த்திரும்பார் | -118 |
| பெருமான் | -13 | போற்றினார் | -19 |
| பெருகி | -27 | போகமாய | -95 |
| பெறும்பேறு | -74 | போவாய் | -35 |
| பேச்சுரையும் | -71 | போதித்தான் | -96 |
| பேய்கொடு | -28-92 | | |
| பேர் | -44 | மஞ்சனம் | -1 |
| பேசார் | -12 | மண்டபத்துள் | -128 |
| பேசாத | -0-67 | மண்ணிட்டு | -124 |
| பேசாதே | -51 | மந்தி | -30 |
| பேசார்கள் | -105 | மந்திரம் | -1-20 |

மன்று -62
மகன் -23-58
மசகமே -85
மலம் -47-54-117
மறப்பார் -62
மறவாமலே -112
மணம் -15
மகிழ்ந்து -27-83
மடியுதே -24
மதித்து -31
மரிக்கும் -11
மருவு -31
மலையின்மேல் -75
மறைப்பது -131
மாங்கீஷத்திலே -23
மாட்டாமல் -37 126 134
மாண்டவிடம் -111
மாற்றி -39
மாயவே -124
மாயிரீர் -15-29
மாறுதில்லை -64
மிஞ்ச -18
மிஞ்சம் -6
மிஞ்சியினி -18-125
முக்கோணம் -125
முட்ட -132
முட்டாகுச் -87
முட்டி -98
முட்டிடமும் -99-100
முந்தி -58
மும்மலத்தை -91
முன்னுஞ் -80
முகம் -82
முடங்கி -65
முதல் -64
முடிந்த -121
முனித்தான் -99
முழுமுதலை -122
மூத்த -58
மூழ்கி -120

மூற்தி -80
மூன்றெழுத்து -122
மூலம் -109
மூடினாள் -87
மூடீர் -29-76
மெத்த -65
மெய் -98
மெய்யட -68
மெய்யென்று -42
மெய்குரு -53 101
மெல்ல -40
மேல -61
மேவும் -54-55
யாட்டுவது -131
யாகமுமாய் -5

வந்தன் -79
வந்தவகை -25
வடக்கு -85
வழிகாட்ட -114
வழிதேடி -38
வருந்த -54
வாய்பேசா -28
வாழ்த்து -4
வாழ்ந்தேன் -112
வான்காணும் -4
வாழலாம் -27-112
வாடாது -127
வாவா -1
வாசி -126
வாசியானந்த -39
வாறு -117
விட்டு -101-124
விட்டிடம் -32
விட்டதினால் -129
விட்டகுறையும் -132
வித்தெழுத்தும் -113
விந்து -55
விளங்கும் -55
விதியும் -132

விரிந்து -115
விரும்பான் -88
விரைந்து -86-88
வீண் -15-24
வீணரே -26-32
வீசி -20
வீடின்பம் -14
வீணே -37
வெட்டாத -0
வெட்டவெளி -45-57
வெள்ளம் -91
வெளி -2
வெளிகாணும் -43
வெளிப்படையாய்
வெளியில் -43
வெளியிலே -2
வெளியை -32
வெளிபார்த்தேன் -34
வேத்துருவாய் -127
வேந்திருக்க -128
வேதம் -133
வேரிலே -17
வேதாந்தத்து -53-54
வேரெழுத்தும் -11
வோரோடி -62

# துணைநூல் பட்டியல்

1. கலைக்களஞ்சியம்

தொகுதி-4

1956

2. வாழ்வியல் களஞ்சியம்

தொகுதி-8

3. நா. முத்தையா

ஈழத்துச் சித்தர்கள்

4. எஸ். பி. இராமச்சந்திரன்

திருமூலர் திருமந்திரமும் வைதீயமும் 1000

5. டி.என். கணபதி

தமிழ்ச் சித்தர் மரபு

6. இரா. அன்பழகன்

சித்தர் வெண்பா- சுவடிப் பதிப்பு

